# சிக்கலான உலகில் எங்களின் திசைகாட்டி

### குறிக்கோளுடன் முன்னோக்கிச் செல்வோம்

நிச்சயமற்ற காலங்களில், நாம் கண்ணுக்கெட்டிய எதிர்காலத்தை மட்டுமல்லாது, கண்ணுக்கெட்டாத எதிர்காலத்தையும் முன்னரே கணிக்கவேண்டும்.

உலகம் எப்படி இருக்கப் போகிறது என்பது பற்றிய கண்ணோட்டத்தை வகுப்பது மிகவும் முக்கியம். நாங்கள் ஆறு தலையாய விவகாரங்களை அடையாளம் கண்டிருக்கிறோம் — சவால்மிகுந்த பொருளியல் சூழல், உலக அரசியல் நடப்புகள், அதிகரித்துவரும் தன்னைப்பேணித்தனம், பருவநிலை மாற்றம், இணையவழி அபாயங்கள், அதோடு தொழில்துறை 4.0.

இவற்றைக் கருத்தில் கொண்டு, சிக்கலான உலகில் எங்களின் திசைகாட்டியாகப் பயன்படும் T2030 உத்தியுடன் நாங்கள் தொடர்ந்து முன்னோக்கிச் செல்வோம்.

நீடித்து நிலைக்கவல்ல மதிப்பை நீண்ட காலத்திற்கு வழங்க செயலூக்கமிக்க மூலதனத்தைப் பயன்படுத்துவோம். கட்டமைப்புகளுடன் இணைந்ததோர் அமைப்பாக, பங்காளிகளுடன் கூட்டிணைந்து எங்களின் செயல்விளைவுகளை உயர்த்துவோம். நன்றாகச் செய்வதற்கும், சரியானதைச் செய்வதற்கும், நல்லதைச் செய்வதற்கும், எங்கள் குறிக்கோளை நோக்கிச் செயல்படுவோம் — *அதனால் ஒவ்வொரு தலைமுறையும் செழிப்படையும்.*

எங்களின் 2030 பயணம்



TEMASEK

## முதலீட்டுப் பட்டியலின் சிறப்பம்சங்கள்

நாங்கள் நீண்டகால அமைப்பியல் போக்குகளுக்கு ஏற்ப மீள்திறனும் முன்னோக்கும் கொண்ட முதலீட்டுப் பட்டியலைத் தொடர்ந்து மேம்படுத்துகிறோம். அதே சமயத்தில், பரந்த பொருளியல் சூழலாலும் சந்தை நிகழ்வுகளாலும் எழும் இடர்களையும் வாய்ப்புகளையும் சமாளிக்கிறோம்.

### தொடங்கப்பட்டதிலிருந்து நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு




தெமாசெக்கின் முதலீட்டுப் பட்டியல் பற்றி மேல்விவரம் அறிய வருடுங்கள்

### தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு

தெமாசெக் கடன் நிலைக் குறிப்பு[4], எங்கள் கடன் தரத்தையும் நிதிநிலை பலத்தையும் எடுத்துக்காட்டுகிறது. எங்கள் முதலீட்டுப் பட்டியலின் மதிப்பில் கடன் விழுக்காடு எவ்வளவு குறைவாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு எங்கள் கடன் தரம் அதிகமாக இருக்கும்

#### ஆதாய ஆற்றல்[5]

மொத்த கடன்

**6%**

நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பில்




தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு பற்றி மேல்விவரம் அறிய வருடுங்கள்

### S$ மொத்த பங்குதாரர் வரவு[6] (%)

**9%**

பங்குதாரருக்குரிய 20 ஆண்டின் ஆதாயம்




### துறை[5,7] (%)




| | 2023 | 2022 |
|---|---|---|
| போக்குவரத்து மற்றும் தொழில்துறைகள்[8] | 23 | 22 |
| நிதிச் சேவைகள் | 21 | 23 |
| தொலைத்தொடர்பு, ஊடகம் மற்றும் தொழில்நுட்பம் | 17 | 18 |
| பயனீட்டாளர் மற்றும் சொத்துச் சந்தை | 16 | 15 |
| உயிராய்வியல் மற்றும் வேளாண்மை உணவு | 9 | 9 |
| பலதுறை நிதிகள் | 8 | 8 |
| மற்றவை (கடன் உட்பட) | 6 | 5 |

### புவியியல்[5,7] (%)




| | 2023 | 2022 |
|---|---|---|
| சிங்கப்பூர் | 28 | 27 |
| சீனா | 22 | 22 |
| ஆசியா (சிங்கப்பூரும் சீனாவும் தவிர்த்து) | 13 | 14 |
| அமெரிக்கா | 21 | 21 |
| ஐரோப்பா, மத்திய கிழக்கு & ஆப்ரிக்கா | 12 | 12 |
| ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து | 4 | 4 |

1 25 ஜூன் 1974 அன்று தெமாசெக் நிர்மாணிப்பு.
2 நிதியாண்டின் முடிவு 1993-க்கு முன்பாக இருந்த டிசம்பர் 31ம் தேதியிலிருந்து 1994 முதல் மார்ச் 31ம் தேதியாக மாற்றப்பட்டது.
3 31 மார்ச் 2006 முடிவுற்ற நிதியாண்டிலிருந்து, கணக்கியல் தரங்களின்படி 20% துணை முதலீடுகள் சந்தைக்குரியதாகக் குறிக்கப்படவேண்டும்.
4 தெமாசெக் ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட் (THPL), அதன் முதலீட்டு ஹோல்டிங் நிறுவனங்கள் ஆகியவற்றின் நிதி விவரங்களின் அடிப்படையிலானது, ஒருங்கிணைக்கப்பட்ட THPL குழுமம் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் அடிப்படையில் அல்ல. தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு பற்றிய மேல்விவரங்களுக்கு தெமாசெக் ஆய்வு 2023 அறிக்கையில் "மீள்திறனும் முன்னோக்கும் மிக்க முதலீட்டுப் பட்டியல் - கடன் நிலைக் குறிப்பு" பகுதியைப் பார்க்கவும்.
5 31 மார்ச் நிலவரப்படி.
6 31 மார்ச் 2023 நிலவரப்படி.
7 அடிப்படைச் சொத்துகளின் அடிப்படையிலான பங்கீடு.
8 போக்குவரத்து மற்றும் தொழிலியல் துறையில் எரிசக்தியிலும் வளங்களிலும் செய்த முதலீடுகள் உள்ளடங்கும்.
9 31 மார்ச் 2023 நிலவிய நாணய மாற்று விகிதங்கள்.

## 2030-ஐ நோக்கிய பயணம்

எங்களது T2030 உத்தி, சிக்கலான உலகில் எங்களின் வழிகாட்டியாகத் துணை நின்று, எங்களது துருவ நட்சத்திரமாக விளங்கும் குறிக்கோளுக்கு எங்களை இட்டுச்செல்லும் — அதனால் ஒவ்வொரு *தலைமுறையும்* செழிப்படையும்

## எங்களது நான்கு முக்கியத் தூண்கள்

### மீள்திறனும் முன்னோக்கும் கொண்ட முதலீட்டுப் பட்டியல்

நீடித்து நிலைக்கவல்ல வளர்ச்சியில் நீண்டகாலம் கவனம் செலுத்தும் அதே வேளையில், வெளிதரப்பு அதிர்ச்சிகளையும் சந்தையின் நிலையில்லாத் தன்மையையும் தாக்குப்பிடிக்கக்கூடிய முதலீட்டுப் பட்டியல் உருவாக்கப்படும்

**எங்களது மூன்று வளர்ச்சி உத்திகள்[10]**

**முதலீட்டு உத்தி**
நீண்ட காலத்திற்கு நீடித்து நிலைக்கவல்ல ஆதாயத்தை ஈட்டித் தருவோம்

**பங்காளித்துவ உத்தி**
பங்காளித்துவங்களின் மூலம் மூலதனத்தைப் பெருக்குவோம்

**மேம்பாட்டு உத்தி**
எதிர்காலத்திற்குத் தேவையான ஆற்றல்களை அடையாளம் கண்டு மேம்படுத்துவோம்




10 31 மார்ச் 2023 நிலவரப்படி முதலீட்டுப் பட்டியலின் உள்ளடக்கம்.
11 சிங்கப்பூரில் தலைமையகம் அமைத்திருக்கும் முக்கிய முதலீட்டுப் பட்டியல் நிறுவனங்கள் மட்டுமே உள்ளடங்குகின்றன.

### நீடித்த நிலைத்தன்மையே மையம்

நீண்ட காலத்திற்கு நீடித்து நிலைக்கவல்ல மதிப்பு வழங்கப்படவேண்டும் என்ற எங்களின் கொள்கையிலிருந்து, எங்களின் செயல்பாட்டு முறை, முதலீட்டுப் பட்டியல் அமைப்புமுறை, முதலீட்டுப் பட்டியல் நிறுவனங்களுடனான ஈடுபாடு ஆகியவற்றுக்கு வழிகாட்டும் எங்களின் உத்தி வரை, நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் நீடித்த நிலைத்தன்மையை மையமாகப் புகுத்துகிறோம்

- பருவநிலை சார்ந்த வாய்ப்புகளில் முதலீடு
- கரியமிலவாயுவற்றத் தீர்வுகளுக்கு உதவி
- தொழில்நிறுவனங்களில் கரியமிலவாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் முயற்சிகளுக்கு ஊக்குவிப்பு

### தெமாசெக் செயல்பாட்டு முறை

எங்களது செயலியக்கத்திலும் சந்தையிலும் மதிப்பு சேர்ப்பதற்காக நிபுணத்துவ ஆற்றல்களை வளர்க்கிறோம்

- செயற்கை நுண்ணறிவு
- தொடரேடு (Blockchain)
- இணையப் பாதுகாப்பு
- தரவு மற்றும் மின்னிலக்கமயம்
- நீடித்து நிலைக்கவல்ல தீர்வுகள்

### அமைப்புமுறை, திறன், ஆற்றல்கள்

எதிர்கால நலனுக்காக அமைப்புமுறை மற்றும் திறன் மேம்பாட்டின் மூலம் நமது மக்களையும், ஆற்றல்களையும், அணிகளையும் வளர்க்கிறோம்

**ஒரு மாற்றத்தை உண்டாக்குங்கள் (MAD)**
அன்றாட வேலைகளுக்கிடையில் புதிதாக எதையாவது கற்றுக்கொள்ள ஊழியர்களை ஊக்கப்படுத்துகிறோம்

**தெமாசெக்கில் அனைத்தும் உள்ளடக்கம்**
பன்மயம், பங்குமுதல், அனைத்தையும் உள்ளடக்கும் நடைமுறைகளை வலுப்படுத்துகிறோம்

**முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள்**
வேகமாக மாறிவரும் உலகைச் சமாளிக்க எங்கள் பங்காளிகள் கூட்டமைப்பைத் தயார்ப்படுத்துகிறோம்

## எங்களது மூன்று அடிப்படை இயலாக்கங்கள்

எங்களது **T2030 உத்தியின் நான்கு முக்கிய தூண்களுக்கும்** அடிப்படைகளாக நிலைநிற்கின்றன. இவை அனைத்தும் எங்களின் வெற்றிக்குக் கைகொடுக்கின்றன

**செயலூக்கமிக்க மூலதனம்**
நிதி, மனித, சமூக, இயற்கைத் துறைகளின் மதிப்பிலும் விளைவுகளிலும் செயலூக்கத்தைத் தூண்டுவோம்

**கட்டமைப்புகளுடன் இணைந்ததோர் அமைப்பு**
சம்பந்தப்பட்ட உள்தரப்புகளோடும் வெளிதரப்புப் பங்காளிகளோடும் கூட்டிணைந்து செயல்பட்டு ஆற்றல்களைப் பெருக்குவோம்

**குறிக்கோள், கலாசாரம், விழுமியங்கள்**
தெளிவான குறிக்கோளை நிலைநாட்டி, வலுவான விழுமியங்களை வளர்ப்போம்